# நீங்கள் சூதாட்டப்பிரச்சினையைக் கொண்டுள்ளீர்களா?

1) சூதாட்டம் காரணமாக நீங்கள் எப்போதாவது உங்கள் வேலை நேரத்தை இழந்துள்ளீர்களா?
2) சூதாட்டம் எப்போதாவது உங்கள் குடும்ப வாழ்க்கையை மகிழ்ச்சியற்றதாக்கியதா?
3) சூதாட்டம் உங்கள் நற்பெயரைப் பாதித்துள்ளதா?
4) சூதாட்டத்தின் பின் எப்போதாவது குற்றஉணர்வினால் கவலை அடைந்துள்ளீர்களா?
5) கடனைத் திருப்பிச் செலுத்த அல்லது வேறு ஏதாவது நிதிநெருக்கடியைத் தீர்ப்பதற்காக வைத்திருந்த பணத்தைப் பயன்படுத்தி எப்பொழுதாவது சூதாடி இருக்கின்றீர்களா?
6) உங்களது உயர்நோக்கங்கள் அல்லது திறமைகளில் வீழ்ச்சி ஏற்படுவதற்கு சூதாட்டம் காரணமாக இருந்ததா?
7) இழப்புகளுக்குப் பின், முடிந்தவரை விரைவாகத் திரும்பவும் சூதாடி இழப்புகளை மீண்டும் வென்றெடுக்க வேண்டும் என்று உணர்ந்ததுண்டா?
8) வெற்றிக்குப் பின், எப்பொழுதாவது மீண்டும் அதிக வெற்றியெடுக்க வேண்டும் என்று தீவிர ஆர்வம் கொண்டதுண்டா?
9) அடிக்கடி, உங்களது கடைசி டொலர் தீரும்வரை சூதாடுவதுண்டா?
10) சூதாட்டத்தில் பயன்படுத்துவதற்காக எப்போதாவது கடன்பட்டதுண்டா?
11) சூதாட்டத்தில் பயன்படுத்துவதற்காக எப்போதாவது எதையாவது விற்றதுண்டா?
12) “சூதாட்டப் பணத்தை” வேறு பொதுச்செலவுகளுக்குப் பயன்படுத்தத் தயங்கியதுண்டா?
13) சூதாட்டம், உங்கள் குடும்ப நலத்தில் அக்கறையின்மையாக இருப்பதற்கு ஏதுவாக இருந்ததா?
14) நீங்கள் திட்டமிட்ட நேரத்திலும் பார்க்கக் கூடிய நேரத்திற்கு எப்போதாவது சூதாடியதுண்டா?
15) கவலை அல்லது பிரச்சினையிலிருந்து தப்புவதற்காக எப்போதாவது சூதாடியிருக்கிறீர்களா?
16) சூதாடுவதற்குப் பணம் பெறுவதற்காக, எப்போதாவது சட்டவிரோத செயலைச் செய்தீர்களா? அல்லது செய்ய முயற்சித்தீர்களா?
17) உங்களது தூக்கத்தில் குழப்பங்கள் உண்டாவதற்கு சூதாட்டம் காரணமாயிருந்ததா?
18) விவாதங்கள், ஏமாற்றங்கள் அல்லது விரக்தி சூதாடுவதற்கு அதிக தூண்டுதலை உண்டாக்குகின்றனவா?
19) ஒரு நல்ல அதிர்ஸ்டத்தைக் கொண்டாட, சில மணிநேரம் சூதாடவேண்டும் என்ற ஆர்வம் உண்டாகியிருக்கின்றதா?
20) உங்கள் சூதாட்டத்தின் காரணமாக, எப்போதாவது உங்கள் சுய அழிவு பற்றி எண்ணியிருக்கிறீர்களா?

ஆதாரம்: அநாமதேய சூதாடுவோர் குழு